**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.315/2022 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 |
| Name : | ரவிச்சந்திரன் |
| Father's Name/Husband Name: | திருமால் |
| Village : | வேப்பூர் |
| Taluk : | குன்னம் |
| Age : | 58/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 28.04.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரி 1 பெரியாசமி ஆஜர். 2, 3 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் படிக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். ஆஜர் 1ம் எதிரியை எனக்கு தெரியும். ஒரே ஊரைச் சேர்ந்தவர். ஆஜர் ஆகாத எதிரிகள் 2ம் எதிரி சாந்தா, 3ம் எதிரி வினிசா ஆகியோரையும் எனக்கு தெரியும். அவர்களும் பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள் தான். பாகப்பிரிவினை சம்பந்தமாக நடந்த பிரச்சனையில் பாகம் பிரித்தபோது, அது சம்பந்தமாக என்னை அழைத்து வெற்று தாளில் அஞ்சலையின் மகள் என்னிடம் கையொப்பம் பெற்றார். போலீசார் என்னிடம் **(என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i) போலீஸ் விசாரணையில் கடந்த 07.04.2022 ந் தேதி மாலை சுமார் 15.15. மணிக்கு நானும் மருதமுத்து மகன் வீரமுத்து என்பவரும் எங்கள் ஊரைச்சேர்ந்த அஞ்சலம் வீட்டின் அருகே நின்றுக்கொண்டிருந்தபோது குன்னம் போலீசார் அங்கு வந்து எங்கள் ஊரைச்சேர்ந்த அஞ்சலம் மற்றும அவரது மகள் அனிசா என்பவர்களை வேல்முருகன் குடுத்தினர்கள் திட்டி, அடித்து, மிரட்டல் விடுத்தது தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்ட விவரத்தினை எங்களிடம் சொல்லி மாதிரி படம் வரைந்து, பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும், பின்பு போலீசார் என்னையும் வீரமுத்துவும் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதின் பேரில் நாங்கள் இருவரும் சாட்சி கையெழுத்து போட்டோம் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

3(i) நான் கையொப்பம் போட்ட வெள்ளை தாளில் வேறு யாரும் என்னுடன் கையொப்பமிட்டார்களா என்று கேட்டால் நான் போடும்போது வெற்றுதாளாகதான் இருந்தது. நேரடியாக போலீசார் என்னிடம் எந்த கையொப்பமும் வாங்கவில்லை என்றால் சரிதான். எதிரிகள் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்பதால்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என் முன்னிலையில் போலீசார் படம் ஏதேனும் வரைந்தார்களா என்றால் இல்லை.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in
the presence of Witness and read over
to the witness and admitted by the
witness to be correct.
Sd/-
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.